# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

Vol : 01 | Issue : 66 | 4 Pages | 08.10.2023 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 Tiruppur

மலர் : 01 | இதழ் : 66 | 4 பக்கங்கள் | 08.10.2023 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## இஸ்ரேல் போர்: டெல் அவிவ்க்கு செல்லும் ஏர் இந்தியா விமானம் ரத்து




டெல்லி, அக்.8

டெல்லியில் இருந்து இஸ்ரேலின் டெல் அவிவ்க்கு செல்லும் ஏர் இந்தியா விமானம் ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இஸ்ரேல் மீது ஹமஸ் பயங்கரவாத அமைப்பு நடத்தி வரும் தாக்குதலால் விமான சேவை ரத்து செய்யப்பட்டு உள்ளது.

வழக்கமாக திங்கள் கிழமை, செவ்வாய் கிழமை, வியாழன் கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமை என வாரத்திற்கு ஐந்து முறை இந்தியா மற்றும் இஸ்ரேல் இடையே விமான சேவை இயக்கப்பட்டு வருகிறது.

டெல்லியில் இருந்து டெல் அவிவ்க்கு செல்லும் ஏர் இந்தியாவின் ஏ.ஐ. 139 விமானமும், டெல் அவிவ்இல் இருந்து டெல்லி வரும் ஏ.ஐ. 140 விமானமும் பயணிகள் மற்றும் பணியாளர்கள் நலன் கருதி ரத்து செய்யப்பட்டு இருக்கிறது என்று விமான நிறுவனத்தின் செய்தி தொடர்பாளர் தெரிவித்து இருக்கிறார்.

காசா எல்லை பகுதியில் உள்ள பயங்கரவாத அமைப்பான ஹமஸ், இன்று இஸ்ரேல் மீது பயங்கர தாக்குதலை நடத்தியது. இந்த தாக்குதலால் இஸ்ரேலில் போர் துவங்கி இருக்கிறது. போர் காரணமாக நிலவும் அசாதாரண சூழல் காரணமாக பாதுகாப்பு காரணங்களுக்காக ஏர் இந்தியா விமான சேவை ரத்து செய்யப்பட்டு இருக்கிறது.

## சிக்கிம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட 8 ராணுவ வீரர்களின் உடல்கள் மீட்பு



சிக்கிம், அக். 8

வெள்ளத்தில் மொத்தம் 23 ராணுவ வீரர்கள் காணாமல் போயினர்.

காணாமல் போன 14 ராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்களை மீட்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சிக்கிமில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் சிக்கி காணாமல் போன ராணுவ வீரர்கள் 8 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக ராணுவ அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

சிக்கிமில் கடந்த புதன்கிழமை ஏற்பட்ட மேக வெடிப்பு காரணமாக டீஸ்டா ஆற்றில் கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதில், 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 150க்கும் மேற்பட்டோர் காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், இந்த வெள்ளத்தில் 23 ராணுவ வீரர்கள் காணாமல் போயினர். இதில், அன்றைய தினம் ஒரு ராணுவ வீரர் மட்டும் மீட்கப்பட்டார் எனவும் கூறப்பட்டது.

இதுகுறித்து அமைச்சர் ராஜ்நாத் சிங் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்," சிக்கிமில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி காணாமல் போன 23 ராணுவ வீரர்களில் எட்டு ராணுவ வீரர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. ராணுவ வீரர்கள் மற்றும் பொது மக்களின் விலைமதிப்பற்ற உயிர்களின் துயரமான இழப்பு மிகவும் வேதனை அளிக்கிறது. காணாமல் போன மீதமுள்ள 14 ராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்களை மீட்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அவர்களின் தியாகம், தேசத்தின் சேவைக்காக முன்னோக்கிச் சென்ற அவர்களது தியாகம் என்றும் மறக்க முடியாது " என்றார்.

## இஸ்ரேல் போர்: 200க்கும் அதிகமானோர் உயிரிழப்பு

இஸ்ரேல் ,அக். 8

காசா எல்லையில் உள்ள ஹமஸ், சில பயங்கரவாத அமைப்புகள் மற்றும் ஆயுதக்குழுக்கள் இணைந்து இஸ்ரேல் மீது திடீர் தாக்குதல் நடத்தின.

சற்றும் எதிர்பாராத நேரத்தில் காசா முனையில் இருந்து இஸ்ரேல் மீது 20 நிமிடங்களில் சுமார் 5 ஆயிரத்திற்கும் அதிக ராக்கெட்கள் ஏவப்பட்டன. இதுதவிர இஸ்ரேல் நகரங்களுக்குள் நுழைந்த ஹமஸ் பயங்கரவாதிகள் துப்பாக்கிச்சூடு நடத்தி வருகின்றனர்.



இந்த நிலையில், இஸ்ரேல் மீது ஹமஸ் பயங்கரவாத அமைப்பு நடத்திய ஏவுகணை தாக்குதலில் 100 பேர் உயிரிழந்தனர் என்றும், 908 பேர் படுகாயம் அடைந்தது இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

திடீர்தாக்குதலை தொடர்ந்து ஹமஸ் படையினர் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் பாலஸ்தீனியர்கள் 198 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் 1,600க்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்ததாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

# பட்டாசு விபத்தில் உயிரிழந்த தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிதியுதவி: முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, அக்.8

தமிழ்நாடுகர்நாடக மாநில எல்லையில் இயங்கிவந்த பட்டாசுக் கடையில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்த தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டு இருப்பதாவது:

தமிழ்நாடுகர்நாடக எல்லையில், கர்நாடக மாநிலம் அத்திப்பள்ளி என்ற இடத்தில் இயங்கிவந்த பட்டாசுக் கடையில் ஏற்பட்ட தீ விபத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 13 பேர் உயிரிழந்தனர் என்ற மிகுந்த வேதனையான செய்தியினைக் கேட்டு துயரமடைந்தேன்.

இச்சம்பவம் குறித்து கேள்விப்பட்டவுடன் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல்





கண்காணிப்பாளர், வருவாய் மற்றும் காவல் துறை அலுவலர்களை விபத்து நடந்த இடத்திற்கு சென்று தேவைப்படும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்கு உறுதுணையாக இருக்க அனுப்பிவைத்துள்ளேன்.

மேலும், இச்சம்பவம் குறித்து நமது தலைமைச் செயலாளர் கர்நாடக மாநில தலைமைச் செயலாளருடன் பேசியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான மருத்துவ உதவிகளை மேற்கொள்ளவும், மேல்சிகிச்சை தேவைப்படுபவர்களை தமிழ்நாட்டுக் கொண்டுவரவும் உரிய ஏற்பாடுகளை செய்ய உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணியையும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியனையும் அனுப்பி வைத்துள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாயும், கடும் காயமடைந்தவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவராண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## மேட்டுப்பாளையத்தில் திருப்பூர் மாநகராட்சியின் நான்காம் கூட்டுகுடிநீர் திட்ட நீரேற்று நிலைத்தின் பணிகள்: அமைச்சர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

திருப்பூர், அக். 8

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், மேயர் ந.தினேஷ்குமார் மற்றும் மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனர் ஆகியோர் முன்னிலையில் கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் ரூ.1120.57 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் மாநகராட்சியின் நான்காம் கூட்டுகுடிநீர் திட்ட நீரேற்று நிலைத்தின் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வின்போது, தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். எந்த வொரு திட்டமானலும் மக்களுக்கு தேவையான திட்டங்களை உடனடியாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் முழுக்கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது.

அந்த வகையில் இன்றைய தினம், மேட்டுப்பாளையத்தில் திருப்பூர் மாநகராட்சியின் நான்காவது கூட்டு குடிநீர் திட்ட நீரேற்று நிலைத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. திருப்பூர் மாநகராட்சியில் புதிய குடிநீர் ரூ. 1120.57 கோடி மதிப்பீட்டில் 6 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1 எண்ணிக்கையில் நீரேற்று நிலையமும் 1 எண்ணிக்கையில்





குடிநீர் சுத்திகரிப்பு நிலையமும், 144.208 கி.மீ நீளத்தில் குடிநீர் ஈர்ப்பு குழாய்களும் பதிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 29 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், அதில் 21 எண்ணிக்கைகள் பணி முடிவுற்று நீரேற்றம் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 08 எண்ணிக்கைகள் பல்வேறு நிலைகளில் பணி நடைபெற்று வருகிறது.

குடிநீர்விநியோககுழாய் 1142.069 கி.மீ சப்ளை செய்யப்பட்டு அதில் 1040.377 கி.மீ பதிக்கப்பட்டுள்ளது. வீட்டு இணைப்புகள் (HSC) மொத்தம் எண்ணிக்கைகள் 67,000 அதில் 63,727 எண்ணிக்கைகள் முடிவுற்றது. DMA Zonation (24X7) குடிநீர் விநியோக குழாய் 57 கி.மீ சப்ளை செய்யப்பட்டு அதில் 11.54 கி.மீ பதிக்கப்பட்டுள்ளது. தற்போது 06.01.2023 முதல் 07.10.2023 வரை 12,576.95 ML (தினசரி சராசரி 60 முதல் 75 MLD) குடிநீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு மொத்தமுள்ள 70 மேல்நிலை தொட்டிகளில் 51 மேல்நிலை தொட்டிகளில் நீரேற்றம் செய்யப்பட்டு சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது.

இதுவரை 95% பணிகள் முடிவுற்றது. வரும் டிசம்பர் 2023 க்குள் பணிகள் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் விரைவாக பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டம் முடிவுறும் தருவாயில் தனிநபர் ஒன்றுக்கு 135 லிட்டர் குடிநீர் வழங்கப்படும். இக்குடிநீர் திட்டம் 30 ஆண்டு காலத்திற்கு பயன்பெரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் தெரிவித்தார்கள்.

தொடர்ந்து, அன்னூர் வட்டம், ஓட்டர்பாளையத்தில் திருப்பூர் மாநகராட்சியின் நான்காம் கூட்டுகுடிநீர் திட்ட நீர்சுத்திகரிப்பு நிலையத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

முன்னதாக, நீர்பாசனத்துறையின் சார்பில் பாவணி சாகர் வடிநிலக் கோட்டம், ஓடந்துறை கிராமத்தில் பாவணி ஆற்றின் குறுக்கே ரூ.24.54 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணியை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இதில் திருப்பூர் மாநகராட்சி துணை மேயர் பாலசுப்பரமணியன், மாநகராட்சி செயற்பொறியாளர் கண்ணன், இளநிலைப்பொறியாளர் கோவிந்த பிரபாகர், நீர்பாசனத் துறை செயற்பொறியாளர் அருள் அழகன், உதவி செயற்பொறியாளர் சுப்பரமணி, உதவி பொறியாளர் ரமேஷ் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

## மூலனூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.1.09 கோடிக்கு பருத்தி விற்பனை

மூலனூர், அக்.8

வெள்ளக்கோவிலை அடுத்த மூலனூர்ஒழுங்குமுறைவிற்பனைக் கூடத்தில் ரூ.1.09 கோடிக்கு பருத்தி விற்பனை நடைபெற்றது.

இந்த வாரம் வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு கோவை, திருப்பூர், ஈரோடு, திருச்சி, கரூர், திண்டுக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து 465 விவசாயிகள் தங்களுடைய 5,152 பருத்திமூட்டைகளை விற்பனை செய்ய கொண்டு வந்திருந்தனர். மொத்த வரத்து 1,628 குவிண்டால். திருப்பூர், ஈரோடு, சேலம், கோவை மாவட்டங்களைச் சேர்ந்த 20 வணிகர்கள் பருத்தியை வாங்க வந்திருந்தனர். பருத்தி குவிண்டால் ரூ.6,450 முதல்



ரூ.7,392 வரை விற்பனை யானது. சராசரி விலை ரூ.6,800. கடந்த வார சராசரி விலை ரூ.6,900. ஒட்டு மொத்த விற்பனை தொகை ரூ.1.09 கோடி. ஏலத்து க்கான ஏற்பாடுகளை திருப்பூர் விற்ப னைக்குழு செயலாளர் சுரேஷ்பாபு, விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சிவகுமார் ஆகியோர் செய்திருந்தனர்.

## ரூ.3கோடி நஷ்டம் வாழைக்கு உரிய இழப்பீடு வழங்காவிட்டால் போராட்டம் விவசாயிகள் அறிவிப்பு

அவினாசி. அக். 8

அவினாசிஒன்றியம் இராமியம்பாளையம், குமாரபாளையம் , புஞ்சைத்தாமரைக்குளம் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் மகாராஷ்டிரா மாநிலத்தை சேர்ந்த ஒரு நிறுவனத்தின் உடுமலைபேட்டை கிளையில் சூப்பர் நேந்திரன் என்ற ரக வாழைக்கன்றுகளை வாங்கி நடவு செய்திருந்தனர். ஆனால் விவசாயிகள்எதிர்பார்த்தபடி குறிப்பிட்ட காலகெடுவுக்குள் வாழைகள் முழு வளர்ச்சியடையவில்லை. இதனால் வாழை விவசாயிகளுக்கு ரூ.3 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தாசில்தாரிடம் புகார் தெரிவித்திருந்தனர். இந்த புகாரின் அடிப்படையில் அவினாசி தாசில்தார் மோகன், தோட்டக்கலை துறை அலுவலர் அனுசியா ,உதவி அலுவலர்கள் சிவசக்தி, முரளி ஆகியோர் பாதிக்கப்பட்ட வாழை மரங்களை ஆய்வு செய்தனர். இதையடுத்து தாலுகா அலுவலகத்தில் தாசில்தார் மோகன் தலைமையில் இரு தரப்பினருக்கு மத்தியில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில் தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் சந்திரகவிதா, உதவி இயக்குனர் உமாசங்கரி, கட்சி சார்பற்ற விவசாய சங்கத்தினர், தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தினர் மற்றும் அவினாசிசுற்றுவட்டார விவசாயிகள் கூட்டத்தில் கலந்துகொண்டு தங்களது கருத்துகளை தெரிவித்தனர். அப்போது பாதிக்கப்பட்ட விவசாயிகள் கூறுகையில், 13 மாதங்களில் அறுவடை செய்யும் ரகமாக சூப்பர் நேந்திரன் வாழைக்கன்றுகளை வாங்கி வந்து பயிரிட்டோம். குறிப்பிட்ட காலக்கெடுவை தாண்டியும் வாழை த்தாரில் சரிவர காய்பிடிக்காமல் முற்றிலும் பிஞ்சாகவே உள்ளது. இதனால் 3 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. எனவே இழப்பீடு வழ ங்க வேண்டும். இல்லாவிட்டால் போராட்டம் நடத்துவோம் என்றனர்.

# ஓசூர் அருகே பட்டாசு கடையில் பயங்கர வெடி விபத்து: 10 பேர் பலி



ஓசூர், அக்.8

ஓசூர் அருகே பட்டாசு கடையில் பயங்கர வெடி விபத்து 10 பேர் பலியாகினர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள் போராடி தீயை அணைத்தனர்.

வெடி விபத்துக்கான காரணம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கர்நாடக மாநில எல்லையான அத்திப்பள்ளி பகுதியில் உள்ள பட்டாசு கடை ஒன்றில் இன்று மாலை பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது.

இதுகுறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள் போராடி தீயை அணைத்தனர்.

இந்த விபத்தில் சிக்கி இதுவரை 10 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் பலர் உள்ளே சிக்கி இருப்பதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கக் கூடும் எனவும் அஞ்சப்படுகிறது.

சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து, வெடி விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சென்னை மெட்ரோவில் இலவச பயணம்.. ஆனால் ஒரு டுவிஸ்ட்



சென்னை, அக். 8

சென்னை மெட்ரோ ரெயில் லிமிடெட் மற்றும் தமிழ்நாடு கிரிக்கெட் வாரியம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்.

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்று வருகின்றன.

அந்த வரிசையில், இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா அணிகள் இடையேயான போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற இருக்கிறது. 2023 உலகக் கோப்பை தொடரில் இந்திய அணியின் முதல் போட்டி இது ஆகும்.

இந்த போட்டி பகல் இரவு ஆட்டமாக நடைபெற இருக்கிறது. இந்த நிலையில், சென்னை மெட்ரோ ரெயில் லிமிடெட் மற்றும் தமிழ் நாடு கிரிக்கெட் வாரியம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி இருக்கிறது. இந்த ஒப்பந்தத்தின் படி போட்டியை காண வரும் ரசிகர்கள் போட்டி முடிந்து திரும்பும்போது சென்னை மெட்ரோ ரெயிலில் இலவச பயணம் மேற்கொள்ள முடியும்.

ரசிகர்கள் போட்டி முடிந்த பிறகு, அரசினர் தோட்டம் மெட்ரோ ரெயில் நிலையத்தில் இருந்து அவர்கள் செல்ல வேண்டிய இடத்திற்கு, போட்டிக்கான டிக்கெட்டை காண்பித்து இலவசமாக பயணம் செய்யலாம். ஆனால் அரசினர் தோட்டம் ரெயில் நிலையம் வருவதற்கான டிக்கெட்களை ரசிகர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும்.



வேலூர் மாவட்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பில் பேரறிஞர் அண்ணா நெடுந்தூர ஓட்டப்போட்டியை கலெக்டர் குமாரவேல் பாண்டியன் கலெக்டர் அலுவலக வளாகத்திலிருந்து கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

# பெருமாநல்லூரில் தேங்கி நிற்கும் கழிவுநீரால் சுகாதார சீர்கேடு



பெருமாநல்லூர், அக். 8

திருப்பூர் மாவட்டம், பெருமாநல்லூர் ஊராட்சிக்கு உட்பட்ட காமாட்சி அம்மன் காலனி, கே.எம்.சி. பப்ளிக் ஸ்கூல் எதிரில் உள்ள தெருவில் மத்திய அரசு நிதியில் இருந்து மூன்று வருடங்களுக்கு முன்பே கழிவுநீர் கால்வாய் அமைக்க நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால் பெருமாநல்லூர் ஊராட்சியில் மெயின்ரோட்டில்இருந்து 100 அடி தூரத்துக்கும் மேல் குழி தோண்டி உள்ளார்கள். ஆனால் கால்வாய் அமைக்க வில்லை. அடுத்த 200 அடிக்கு மேல் குழியும் தோண்டவில்லை. கழிவுநீர் கால்வாயும் அமைக்கவில்லை. அடுத்த 300 அடிக்கு மேல் கால்வாய் அமைத்துள்ளார்கள். அதன் தரம் மிகவும் மோசமாக உள்ளது. மேலும் கால்வாயில் கழிவுநீர் செல்ல வழி இல்லாமல் தேங்கியுள்ளது. வீடுகளே இல்லாத பக்கம் கால்வாய் நேர்கோட்டில் இல்லாமல் வளைந்தும், நெளிந்தும் போடப்பட்டுள்ளது. இது அமைத்த தன் நோக்கமே புரியாமல் அந்த தெருவில் உள்ள மக்கள் புலம்பி தவிக்கிறார்கள். வீடுகள் அதிகம் உள்ள பகுதியில் கால்வாய் அமைக்காமல் ஊருக்கு ஒதுக்குப்புறம் குறைந்த வீடுகளே உள்ள பகுதியாக தேர்ந்தெடுத்து பாதி பகுதிக்கு மட்டும் கழிவுநீர் கால்வாய் அமைத்ததால் நிதி முறைகேடு ஏற்பட்டு இருக்கலாம் என்று பொதுமக்கள் சந்தேகிக்கிறார்கள். இது பற்றி மாவட்ட கலெக்டரிடம் மனு கொடுக்க உள்ளோம். மேலும் திருப்பூர் வடக்கு ஒன்றிய பாரதிய ஜனதா கட்சி சார்பில் பொதுமக்களை ஒன்றிணைத்து ஆர்ப்பாட்டமும் நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த தகவலை திருப்பூர் மாவட்டம் வடக்கு ஒன்றிய பா.ஜ.க. பொது செயலாளர் குமார் தெரிவித்துள்ளார்.

# டெங்கு நோய் பரவும் அபாயம்: பெருமாநல்லூரில் குடிநீர் குழாயை சீரமைக்க கோரிக்கை



பெருமாநல்லூர், அக்.8

திருப்பூர் மாவட்டம் பெருமாநல்லூர் ஊராட்சிக்கு உட்பட்ட பாலசமுத்திரம் அருகில் 1 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் தொட்டி உள்ளது. இந்த தொட்டியில் இருந்து வெளியே வரும் தண்ணீர் பைப் துரு பிடித்து பல வருடங்கள் ஆகிறது. இது குறித்து புகார் நோட்டில் எழுதி வைத்து 1 மாதம் ஆகிறது. இதுவரை அந்த பைப் மாற்றப்படாமல் உள்ளது. இந்த தண்ணீரை பயன்படுத்தும் பொதுமக்களுக்கு டெங்கு நோய் பரவும் அபாயமும் உள்ளது. இந்த தண்ணீர் 9 பகுதிகளுக்கு செல்கிறது. அதாவது, கற்பகாம்பாள் நகர், லண்டன் சிட்டி, சி.எஸ்.ஐ. காலனி, பாலசமுத்திரம், பொடாரம்பாளையம், ஆதிதிராவிடர் காலனி மற்றும் பொடாரம்பாளையம் தொடக்க பள்ளிக்கும் இந்தத் தண்ணீர் செல்கிறது. பொதுமக்கள், பள்ளி மாணவ மாணவிகள் நலன் கருதி உடனடியாக இந்த தண்ணீர் வடியும் கேட் வால்வு மற்றும் துரு பிடித்த பைப்பை புதுப்பித்து தர வேண்டும் என்று அப்பகுதியின் சமூக ஆர்வலரும், பா.ஜ.க. பிரமுகருமான குமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

# மின்சார ரெயில் மோதி வாலிபர் சாவு

ராயபுரம், அக். 8

கொருக்குப்பேட்டை கைலாசா செட்டி தெருவை சேர்ந்தவர் விஜயலட்சுமி. வீட்டு வேலை செய்து வருகிறார். இவரது மகன் லோகேஷ் (17). நேற்று இரவு லோகேஷ் தண்டையார்பேட்டையில் உள்ள ரெயில் தண்டவாளத்தில் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது அந்த வழியாக வந்த மின்சார ரெயில் மோதியது. இதில் லோகேசுக்கு பலத்த காயம் ஏற்பட்டது. பொதுமக்கள் அவரை மீட்டு ஸ்டான்லி அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் இன்று அதிகாலை சிகிச்சை பலனின்றி பரிதாபமாக இறந்தார். இச்சம்பவம் குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066



அமைச்சர் சாமிநாதன் கோவை பவானி சாகர் கோட்டம் நீர் பாசனத்துறையின் சார்பில் ஓடந்துறை கிராமத்தில் பவானி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணியை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# தாராபுரம் வட்ட சட்ட பணிகள் குழு மற்றும் தீயணைப்பு துறையினர் இணைந்து தகவல் அறியும் உரிமை சட்ட வார விழா



தாராபுரம், அக். 8

தாராபுரம் வட்ட சட்ட பணிகள் குழு மற்றும் தீயணைப்புத் துறையினர் இணைந்து தகவல் அறியும் உரிமை சட்ட வார விழாவை முன்னிட்டு விழிப்புணர்வு முகாமை தாராபுரம் ராமகிருஷ்ணா நல்லம்மை பாலிடெக்னிக்கில் நடத்தினர்.

நிகழ்ச்சிக்கு கல்லூரி சேர்மன் வேணுகோபாலு முன்னிலை வகித்தார். கல்லூரி விரிவுரையாளர் ராஜேஷ் கண்ணா வரவேற்றார். சட்டம் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் தகவல் உரிமை சட்டத்தில் உள்ளசிறப்புகள்குறித்தும், காலக்கெடு, மேல்முறையீடு போன்றவற்றை விரிவாக தாராபுரம் சப்ஜட்ஜ் தர்ம பிரபு எடுத்துக்கூறி பொது அறிவு போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளையும் வழங்கினார். மாஜிஸ்திரேட் பாபு மோட்டார் வாகன சட்டம் குறித்து பேசியதுடன் 18 வயதுக்கு உட்பட்டவர்கள் மோட்டார் சைக்கிள் ஓட்டி விபத்து ஏற்படுத்தினால் பெற்றோர்களுக்கு தண்டனை வழங்கப்படும் என்பதால் முறையாக லைசென்ஸ் பெற்ற பிறகு ஓட்ட வேண்டும் என்று பேசினார்.

தாராபுரம் தீயணைப்பு அலுவலர் ஜெயச்சந்திரன் பேரிடர் காலங்களில் ஏற்படும் விபத்துக்களில் இருந்து எவ்வாறு தற்காத்து கொள்ள வேண்டும் என்று தீயணைப்புகுழுவினர் மூலம் செயல் விளக்கம் அளித்தார். கல்லூரி செயலாளர் விஷ்ணு செந்தூரன் ,அறங்காவலர்கள் முத்துக்குமார் ,சவுந்தர்ராஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர் .முடிவில் பிரின்ஸ்பால் முரளிதரன் நன்றி கூறினார்

# தாராபுரத்தில் விழிப்புணர்வு பேரணி



தாராபுரம், அக். 8

திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி ஒன்றியம் சார்பாக 0 முதல் 18 வயது மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு நடைபெற இருக்கும் இலவசம் மருத்துவ முகாம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக பேரணி நடைபெற்றது.

இப்பேரணி என்.ஜி.ஜி.ஓ காலனியில் அமைந்துள்ள அரசு பொண்ணு மகளிர் உயர்நிலைப் பள்ளியில் இருந்து நடைபெற்றது இந்த பேரணியில் மாற்றுத்திறன் மாணவ மாணவர்களுக்கு உண்டான விழிப்புணர்வு பதாகைகள் ஏந்தி பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இதில் பள்ளி தலைமை ஆசிரியர், மேற்பார்வையாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், ஆசிரிய ஆசிரியைகள், பயிற்றுநர்கள், சிறப்பு ஆசிரியர்கள், இயன்முறை மருத்துவர்கள் பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.




கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற தகவல் அறியும் உரிமைச்சட்டம் விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டத்தினை கலெக்டர் ஸ்ரீதர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

# அமராவதி அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்க கோரிக்கை



உடுமலை, அக். 8

திருப்பூர் மாவட்டம் தமிழ்நாடு விவசாயிகள் சங்க தலைவர் எஸ்.ஆர். மதுசூதனன், செயலாளர் ஆர்.குமார் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

உடுமலை அடுத்த மடத்துக்குளம் தாலுக்கா, அமராவதி ஆற்றில் அமைந்துள்ள அமராவதி அணை மூலம் மடத்துக்குளம் தாலுக்கா, தாராபுரம் தாலுக்கா மற்றும் கரூர் மாவட்டத்திலும் சேர்த்து பழையவாய்க்கால் பாசனம் மூலம் 25 ஆயிரம் ஏக்கரும், புதிய கால்வாய் மூலம் பாசனம் பெறும் பகுதியும் சேர்த்து 55 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி கிடைத்து வருகிறது. இதன் மூலம் திருப்பூர், கரூர் மாவட்டம் உட்பட நிலத்தடி நீரும் பெருகி ஓரளவுக்கு பயன்பெற்று வருகிறது. ஆனால் அமராவதி அணைக்கு தென்மேற்கு பருவமழை காலத்தில் தான் அதிகமான நீர்வரத்து பெரும்பாலான ஆண்டுகளில் கிடைத்து வந்துள்ளது. இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை போதுமான அளவு கிடைக்கப் பெறாத நிலையில் தேவையான நீரை விட மிகக் குறைந்த நீரே கிடைத்துள்ளது. இந்நிலையில் பாசனப்பகுதியில் தென்னை மரங்கள், நீண்ட கால பயிர்களும் இந்த ஆண்டு பயிரான கரும்பு உட்பட பயிர்கள், நீர் பற்றாக்குறையால் காயும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. வடகிழக்கு பருவமழையும் துவங்க வேண்டிய காலத்தில் துவங்காத நிலை உள்ளதால் கடுமையான வறட்சி நிலவுகிறது. குறிப்பாக பிரதான கால்வாய் பகுதிகளில் உள்ள தென்னை மரங்கள் காய்ந்து கொண்டு வருகிறது. நீர் பற்றாக்குறையால் காய்ப்பு இழந்து கருகும் நிலையும் ஏற்பட்டுள்ளது. இப்பகுதியில் கால்நடைகளுக்கும், குடிநீருக்கும் தண்ணீரை டிராக்டர்களி லும் லாரிகளிலும் விலை கொடுத்து வாங்கி ஊற்றி வருகின்றனர். அமராவதி சர்க்கரை ஆலைக்கு பதிவு செய்த கரும்பு பயிர்களை காப்பாற்ற முடியுமா என்ற நிலை ஏற்பட்டுள்ளது. மேற்காணும் பயிர்களுக்கு உடனடியாக நீர் பாசனம் செய்ய வேண்டி உள்ளது. அமராவதி அணையில் 65 அடிக்கு மேல் தண்ணீர் இருப்பதால் உள்ள நீரை பயன்படுத்தி வறட்சியான நேரத்தில் வடகிழக்கு பருவமழை கிடைப்பதற்கு முன்னால் ஏற்பட்டுள்ள வறட்சி பாதிப்பை தடுத்திடவும், புதிய ஆயக்கட்டு பகுதிகளுக்கும் பழைய பாசன பகுதிகளுக்கும் இருக்கிற நீரை பகிர்ந்து அளிக்க வேண்டும். அமராவதி ஆற்றில் குடிநீர் தேவைக்கென கடந்த காலங்களில் கூடுதலான தண்ணீர் திறப்பது நடைமுறையில் இருந்து வந்துள்ளது. இதன் மூலம் ஆற்றில் உள்ள சட்டவிரோத மான 1500 க்கும் மேற்பட்ட பம்பு செட்டுகள் இந் நீரை பயன்படுத்தும் நிலைமையே இருந்து வந்துள்ளது. இதனால் பாசனம் பெற வேண்டிய பகுதிகள் பாதிப்புக்குள்ளாகிறது.

ஆகவே, இந்த ஆண்டு கடுமையான வறட்சி நிலவும் காலத்தில் ஆற்றிலிருந்து சட்டவிரோதமாக நீரை எடுக்கின்ற பம்பு செட்டுகளின் மின் இணைப்புகளை துண்டித்து அதன் மூலம் அபரிமிதமாக தண்ணீரை எடுப்பதை தடுத்து நிறுத்திட முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும் , புதிய ஆயக்கட்டு பகுதிகளுக்கும்,

பழைய ஆயக்கட்டு பகுதிகளுக்கும் சமமான அளவில் நீர் திறக்கவும் செய்ய வேண்டும். தலா 800 கன அடி வீதம் குடிநீர் தேவை உட்பட திறக்க வேண்டுமெனவும், காலதாமதம் செய்யாமல் காய்ந்து வரும் நீண்ட கால பயிர்களான தென்னை, கரும்பு மற்ற பயிர்களை காப்பாற்ற உடனடியாக தண்ணீர் திறக்க வேண்டும். வறட்சியான நேரத்தில் சிக்கனமாக தண்ணீரை பயன்படுத்து வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் சங்கத்தின் சார்பிலும், அப்பகுதி விவசாயிகளின் சார்பிலும் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

# பா.ஜ.க.வை கண்டித்து ஆர்ப்பாட்டம்: விஜய் வசந்த் எம்.பி. பங்கேற்பு



நாகர்கோவில், அக். 8

காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தியை ராவணன் போல் சித்தரிக்கும் படத்தை வெளியிட்ட பாரதிய ஜனதா கட்சியை கண்டித்து கே.எஸ். அழகிரி அறிவுறுத்தலின் பேரில் தமிழக காங்கிரஸ் சார்பில் தமிழகம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பாக குளச்சல் பகுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் குமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் கலந்து கொண்டார்.

மாவட்ட தலைவர் கே.டி. உதயம், சட்டமன்ற உறுப்பினர் பிரின்ஸ், மாநில மாவட்டகாங்கிரஸ்நிர்வாகிகள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

# விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் கொடிய எதிரி பிளாஸ்டிக்



திருப்பூர், அக். 8

வன உயிரின வாரத்தை முன்னிட்டு திருப்பூர் வனச்சரகம் மற்றும் திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டம்அலகு 2 சார்பில் வனவிலங்கு பாதுகாப்புக்கான கூட்டாண்மை என்ற மையகருத்தை வலியுறுத்தி இன்று நஞ்சராயன் பறவைகள் சரணாலயத்தில் பிளாஸ்டிக் இல்லா பறவைகள் சரணாலயமாக மாற்றுவதற்கு பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றியும் கலை நிகழ்ச்சி நடத்தியும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

நாட்டு நலப்பணித் திட்டம் அலகு2 ஒருங்கிணைப்பாளர் மோகன்குமார்முன்னிலைவகித்தார். சிறப்பு விருந்தினராக வனச்சரக அலுவலர் சுரேஷ் கிருஷ்ணன் கலந்து கொண்டு நிகழ்ச்சியினை துவக்கி வைத்தார்.

வனச்சரக அலுவலர் பேசுகையில், நெகிழி பொருட்களை அறவே தவிர்க்க வேண்டும். அவற்றை பறவைகளும், விலங்குகளும் சாப்பிட்டால் செரிமானம் ஆகாமல் இறந்து விடுகின்றன.

பிளாஸ்டிக்கின் நச்சுப் பகுதிகள் கடல் உணவுகள் மூலம் மனித உடலுக்குள் சென்றடைவதால் பிளாஸ்டிக் மனித ஆரோக்கியத்தில் பாதிப்பை ஏற்படுத்தும்.

உணவு சங்கிலிகள் பெரியதாகவோ அல்லது சிறியதாகவோ இருக்கலாம். பிளாஸ்டிக் உணவு சங்கிலியின் சிறிய உயிரினங்களுக்குதீங்குவிளைவிக்கும். அதுமட்டுமல்லாமல் நமது சந்ததிகளை பாதிக்கும் என்று பேசினார்.

நிகழ்ச்சியில் வனவர்கள் முருகானந்தம், வெங்கடாசலம், உமாமகேஸ்வரி, சரகப்பணியாளர் சிவமணி ஆகியோர் கலந்து கொண்டனர். மாணவ செயலர்கள் சுந்தரம், விஜய், செர்லின், தினேஷ்கண்ணன், ஜோஷ்வா கிஷோர் ஆகியோர் தலைமையில் 55க்கும் மேற்பட்ட அலகு 2 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பறவைகள் சரணாலயத்தில் இருக்கும் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றியும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தியும், பிளாஸ்டிக் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடத்தினர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரி முதல்வர் கிருஷ்ணன் செய்திருந்தார்.

# வடகிழக்கு பருவமழை: பள்ளிகளுக்கு அதிரடி உத்தரவு

தாராபுரம்: அக். 8

வடகிழக்கு பருவமழை இம்மாத இறுதியில் இருந்து துவங்குகிறது. பள்ளிகளுக்கு முதற்கட்ட பராமரிப்பு நிதி ஒதுக்கியதால் மழை துவங்கும் முன்பே பராமரிப்பு வேலைகள்செய்துமுடிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இதோடு பயன்படுத்தாத, இடியும் நிலையில் உள்ள கட்டடங்கள் அருகில் மாணவர்கள் செல்லாத வகையில் தடுப்பு அமைத்தல், தொங்கும் நிலையில் மின் வயர்கள் இருந்தால் அப்புறப்படுத்துதல் அவசியம். மின் இணைப்புகளை மாணவர்கள் தொடாத வகையில் வகுப்பறையில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

தண்ணீர் தேங்கும் வகையில், பள்ளங்கள் இருந்தால் அதை சமன் செய்வதோடு, பள்ளி வளாகத்திற்குள் கிணறு, ஆழ்துளைகிணறுபோன்ற அமைப்புகள் இருந்தால், மூடி வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. கழிவறைகளை தினசரி சுத்தம் செய்வதோடு, குடிநீர் தொட்டி சுத்தமாக இருப்பதை உறுதி செய்ய வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வித்துறை அதிகாரிகள் கூறுகையில், பள்ளி கட்டடங்களின் அருகில் மரங்கள் இருந்தால், அதன் காய்ந்த இலைகள், குச்சிகள், மேற்கூரையில் இருக்கும் பட்சத்தில், மழைநீர் தேங்க வாய்ப்புள்ளது. இதை அப்புறப்படுத்துவதோடு வளாகத்தை தூய்மையாக வைத்திருக்க உத்தரவிடப்பட்டுள்ளது. பராமரிப்பு நிதி ஒதுக்கியிருப்பதால், இத்தொகை கொண்டு அத்தியாவசிய பணிகளை முடிக்க வேண்டும். தண்ணீர் தேங்காத வகையில் வளாகத்தை தூய்மைப்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றனர்.

# திருப்பூர் வழியாக தாம்பரம் – மங்களூருக்கு சிறப்பு ரெயில் இயக்கம்



திருப்பூர், அக். 8

கூட்ட நெரிசலை தவிர்க்க, தாம்பரம் மங்களூர் இடையே சிறப்பு ரெயில்கள் இயக்கப்பட உள்ளன.சேலம், ஈரோடு, திருப்பூர், கோவை வழியாக தாம்பரம்மங்களூர் இடையே இந்த சிறப்பு ரெயில்கள் இயக்கப்படுகின்றன.

ரெயில் எண் (06049) தாம்பரம் மங்களூர்சிறப்பு ரெயில் 13, 20 மற்றும் 27 ஆகிய தேதிகளில் தாம்பரத்தில் இருந்து மதியம் 1:30 மணிக்கு புறப்பட்டு, மறுநாள் காலை 7:30 மணிக்கு மங்களூரை சென்றடையும்.

ரெயில் எண் (06050) மங்களூர்தாம்பரம்சிறப்பு ரெயில் மங்களூருவில் இருந்து 14, 21 மற்றும் 28 ம் தேதிகளில் மதியம் 12 மணிக்குப் புறப்பட்டு, மறுநாள் மாலை 5 மணிக்கு தாம்பரம் சென்றடையும். நிறுத்தங்கள்: சென்னை எழும்பூர், பெரம்பூர், அரக்கோணம், காட்பாடி, ஜோலார்பேட்டை,சேலம்,ஈரோடு, திருப்பூர், கோவை, பாலக்காடு, ஒத்தப்பாலம், சொரனூர், திரூர், கோழிக்கோடு, வடகரா, தலச்சேரி, கண்ணூர், பையனூர் மற்றும் காசர்கோடு வரை செல்லும்.

# திருப்பூரில் இன்று குழந்தைகளுக்கான இலவச இருதய சிகிச்சை முகாம்

திருப்பூர்: அக். 8

திருப்பூரில் தன்னார்வ தொண்டு நிறுவனம் சார்பில் குழந்தைகளு க்கான இலவச இருதய சிகிச்சை முகாம் நாளை 8ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறுகிறது.இதுகுறித்து தொண்டு நிறுவனத்தின் திருப்பூர் பிரிவு நிர்வாகிகள் கூறியதாவது:

கடந்த 13 ஆண்டுகளுக்கு முன்பு 'இதயம் காப்போம்' என்ற குழந்தைகளுக்கான இலவச இருதய பரிசோதனை, ஆலோசனை மற்றும் அறுவை சிகிச்சை முகாம்களை நடத்தத் தொடங்கினோம்.

தற்போது 12 ம் ஆண்டு குழந்தைகளுக்கான இலவச இருதய சிகிச்சை முகாம் திருப்பூர் அவிநாசி சாலையில் உள்ள வித்யா மந்திர் பள்ளியில் நாளை 8 ந் தேதி காலை 7 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை நடைபெறுகிறது. இதில், இருதயப் பிரச்னை உள்ள பிறந்த குழந்தை முதல் 16 வயது வரை உள்ள சிறுவர், சிறுமியர்கள் பங்கேற்று ஆலோசனை மற்றும் சிகிச்சை பெறலாம். அப்பல்லோ குழந்தைகள் மருத்துவமனையின் மருத்துவக் குழுவினர் எக்கோ கார்டியோகிராம் பரிசோதனை செய்து ஆலோசனை வழங்குவர்.

தேவைப்படுபவர்களுக்கு தமிழ்நாடு அரசு காப்பீட்டுத் திட்டம் மற்றும் எங்களது அமைப்பின் பங்களிப்புடன் இலவசமாக அறுவை சிகிச்சை செய்யப்படும்.அதேவேளையில் காப்பீட்டுத் திட்ட வசதி இல்லாதோருக்கும் இதே வசதியை வழங்கத் திட்டமிட்டுள்ளோம். இதுவரை 'இதயம் காப்போம்' இலவச இருதய சிகிச்சை முகாம் மூலம் 380 குழந்தைகளின் உயிர் காப்பாற்றப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது என்றனர்.

# திருப்பூர் அவினாசி ரோடு அனுப்பர்பாளையம் புதூரில் உள்ள கனரா வங்கியின் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி

திருப்பூர், அக். 8

திருப்பூர் அவினாசி ரோடு அனுப்பர்பாளையம் புதூரில் உள்ள கனரா வங்கியின் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிலையத்தின் சார்பில் தொழில் முனைவோரு க்கான இலவச தொழில் பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளது. இவ் வகுப்பானது வருகிற 9ந்தேதி (திங்கிழமை) முதல் தொடங்க உள்ளது.

இதில் ஏ.சி. மற்றும் பிரிட்ஜ் சம்பந்தப்பட்ட பயிற்சிகள் தொடர்ந்து 30 நாட்கள் நடைபெற உள்ளது. பயிற்சிக்கு எவ்விதக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. பயிற்சி நேரம் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை. பயிற்சி காலத்தில் காலை, மாலை தேநீர், மதிய உணவு, பயிற்சி உபகரணங்கள் மற்றும் பயிற்சி சீருடைகள் இலவசமாக வழங்கப்படும்.

மேலும் தொழில் தொடங்க கடன் ஆலோசனைகள் வழங்கப்படும். தொழில் பயிற்சி மட்டுமின்றி தொழில்முனைவோர் மேம்பாட்டு பயிற்சியும் கற்றுத்தரப்படும். இதில் குறைந்த காலியிடங்களே உள்ளது.

எனவே பயிற்சியில் சேர விருப்பம் உள்ளவர்கள் உடனடியாக ஆதார் நகல், குடும்ப அட்டை நகல், வங்கி கணக்கு புத்தக நகல், பேன் கார்டு நகல், பாஸ்போர்ட் சைஸ் போட்டோ4 ஆகியவற்றுடன் நேரில் வரவும். அல்லது http://tinyurl.com/4z2 என்ற ஆன்லைன் மூலமும் விண்ணப்பி க்கலாம். பயிற்சி முடிந்த பின் தேர்ச்சி பெற்ற அனைவருக்கும் மத்திய அரசின் சான்றிதழ் வழங்கப்படும். எனவே மேலும் இதுபற்றி தெரிந்து கொள்ள 9952518441, 8610533436, 9489043923 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.



மதுரை மாநகராட்சி மண்டலம் 4 காமராஜர்புரம் பகுதியில் பாதாள சாக்கடையில் ஏற்பட்டுள்ள அடைப்புகள் சரிசெய்யும் பணியினை மேயர் இந்திராணி பொன்வசந்த், ஆணையாளர் பிரவீன்குமார் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர்.



நெல்லை பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டரங்கில் அறிஞர் அண்ணா நெடுந்தூர ஓட்ட போட்டியினை கலெக்டர் கார்த்திகேயன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



பெரம்பலூர் வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தழுதாழை ஊராட்சியில் கால்நடைகளுக்கான சுகாதார முறைகள் மற்றும் கால்நடை வளர்ப்பு முறைகள் குறித்த விழிப்புணர்வு முகாமினை அமைச்சர் சிவசங்கர் தொடன்வி வைத்து அதிக பாள் உற்பத்தி செய்து வழங்கிய மாடுகளின் உரிமையாளருக்கு சிறந்த மேலாண்மைக்கான விருதினை வழங்கினார்.



புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி மாவட்ட விளையாட்டரங்கில் அறிஞர் அண்ணா நெடுந்தூர ஓட்டப் போட்டியினை அமைச்சர் ரகுபதி கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



ராமநாதபுரம் இ.சி.ஆர். சாலையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நடைபெற்ற அறிஞர் அண்ணா நெடுந்தூர ஓட்டப்போட்டியினை கலெக்டர் விஷ்ணு சந்திரன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



சேலத்தில் மாபெரும் கல்விக்கடன் மேளா நடத்துவது தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்து வங்கியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்களுடனான ஆலோசனை கூட்டம் கலெக்டர் கார்மேகம் தலைமையில் நடைபெற்றது.



திண்டுக்கல் கலெக்டர் முகாம் அலுவலகத்தில் பெண்களுக்கான மாவட்ட அளவிலான அறிஞர் அண்ணா நெடுந்தூர ஓட்டப்போட்டியை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாஸ்கரன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023




# சமுதாயத்தைத் திருத்த படம் எடுக்கவில்லை : சித்தார்த்



எடாகி எண்டர்டெயின்மெண்ட் தயாரிப்பில் அருண்குமார் இயக்கத்தில் நடிகர்கள் சித்தார்த், அஞ்சலி நாயர், நிமிஷா சஜயன், குழந்தை நட்சத்திரங்கள் பஃபியா , சஹஸ்ரா ஆகியோர் நடித்திருந்த படம் 'சித்தா'. ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வரும் சித்தா படத்தின் வெற்றியை கொண்டாடும் நிகழ்ச்சி சமீபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு பேசிய நடிகர் சித்தார்த், "இது அருண்குமாரின் 'சித்தா'. வெற்றி, தோல்வி என்பது குறித்து நாங்கள் முடிவு செய்யாமல் படத்தின் கதைக்கருவுக்காக எடுத்தோம். நாட்டை மாற்றவோ, சமுதாயத்தைத் திருத்தவோ படம் எடுக்கவில்லை. நல்ல விஷயம் பல ஆயிரம் வகையில் நடக்கலாம் என்பதைத் தெரியப்படுத்த வேண்டும் என விரும்பினோம்," என்று தெரிவித்தார்.




# ஆட்டத்திற்கு நேரம் வந்துவிட்டது.. ஜிகர்தண்டா2 அப்டேட்

'ஜிகர்தண்டா'படத்தின்வெற்றியைத்தொடர்ந்து8வருடங்களுக்குபிறகுஇப்படத்தின்இரண்டாம்பாகம்உருவாகியுள்ளது. கார்த்திக் சுப்பராஜ் இயக்கியுள்ள இந்த படத்தில் எஸ்.ஜே.சூர்யா மற்றும் ராகவா லாரன்ஸ் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர். இப்படம் வருகிற தீபாவளியன்று திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதையடுத்து இப்படத்தின் டீசர் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது.

இந்நிலையில், இப்படத்தின்முதல்பாடல்குறித்தஅறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படத்தின்முதல்பாடலான 'மாமதுர' பாடல் 9ஆம் தேதி நண்பகல் 12.12 மணிக்கு வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. இந்த போஸ்டரை தனது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள இயக்குனர் கார்த்திக் சுப்பராஜ், "ஜிகர்தண்டா 2 படத்தின் முதல் பாடலுக்கு நடனமாட நேரம் நெருங்கிவிட்டது" என்று குறிப்பிட்டுள்ளார்.

# இறுகப்பற்று படக்குழுவை பாராட்டிய சூர்யா



இயக்குனர் யுவராஜ் தயாளன் இயக்கத்தில் நடிகர்கள் விக்ரம் பிரபு மற்றும் விதார்த் இணைந்து நடித்துள்ள திரைப்படம் 'இறுகப்பற்று'. இந்த படத்தில் ஸ்ரத்தா ஸ்ரீநாத், ஸ்ரீ, அபர்நதி, சானியா ஐயப்பன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். பொடன்ஷியல் ஸ்டூடியோஸ் தயாரித்துள்ள இந்த படத்துக்கு ஜஸ்டின் பிரபாகர் இசையமைத்துள்ளார். இப்படம் திரையரங்குகளில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

இந்நிலையில், 'இறுகப்பற்று' படக்குழுவை பாராட்டி நடிகர் சூர்யா பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில், "இறுகப்பற்று திரைப்படம் நிறைய அன்பைப் பெறுவதைப் பார்ப்பதில் மகிழ்ச்சி. இயக்குனர் யுவராஜ் தயாளன் மற்றும் படக்குழுவுக்கு வாழ்த்துகள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஒருவர் என்னுடைய அம்மா.. ஒருவர் என்னுடைய மனைவி.. விஜய், ஷாருக்கான் குறித்து அட்லீ நெகிழ்ச்சி





தமிழ் திரையுலகின் முன்னணி இயக்குனரான அட்லீ, மெர்சல், தெறி, பிகில் என விஜய்க்கு பல ஹிட் படங்களை கொடுத்து ரசிகர்களை கவர்ந்தார். தொடர்ந்து அட்லீ இயக்கத்தில் ஷாருக்கான் நடிப்பில் சமீபத்தில் பான் இந்தியா திரைப்படமாக வெளியான 'ஜவான்' திரைப்படம் ரூ. 1000 கோடிக்கு மேல் வசூலை குவித்து ஒட்டுமொத்த பாலிவுட் படங்களின்வசூலைஓரம்கட்டியுள்ளது. இந்தவெற்றிமூலம்அட்லீஉலகபுகழ்பெற்றஇயக்குனராகஇடம்பெற்றுள்ளார்.

இந்நிலையில், நேர்காணல் ஒன்றில் கலந்து கொண்ட அட்லீ, விஜய் மற்றும் ஷாருக்கான் குறித்து மனம் திறந்துள்ளார். அவர் பேசியதாவது, விஜய் ஷாருக்கான் இருவரில், ஒருவர் என்னுடைய அம்மா. ஒருவர் என்னுடைய மனைவி. இரண்டு பேர் இல்லாமலும் நம்மால் வாழமுடியாது. இன்று நான் இங்கு இருப்பதற்கு காரணம் விஜய் சார் தான்.

அவர் எனக்கு அடுத்தடுத்து திரைப்படங்களை இயக்க வாய்ப்பு கொடுத்தார். நான் அவருக்கு வெற்றிப்படங்களை கொடுத்திருக்கிறேன். ஆனால், அவர் என்னை மிகவும் நம்பினார். ஷாருக்கான் படம் நடிக்க நினைத்தால் உலகத்தில் உள்ள எத்தனையோ இயக்குனர்கள் வருவார்கள். ஆனால் அவர் என்னை நம்பினார். இன்றுவரை அது ஏன் என்று தெரியவில்லை. ஆனால் அவரது நம்பிக்கைதான் என்னை மிகுந்த பொறுப்புடனும் அன்புடனும் படத்தை செய்ய வைத்தது" என்று பேசினார்.

# சிறுவர்களின் கோரிக்கையை நிறைவேற்றிய சூரி



தமிழ் திரையுலகின் முன்னணி காமெடி நடிகராக வலம் வருபவர் சூரி. இவர் பல முன்னணி திரைப்பிரபலங்கள் படங்களில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். சூரி முதன் முதலாக கதாநாயகனாக அறிமுகமான திரைப்படம் 'விடுதலை'. இந்த படத்தை இயக்குனர் வெற்றிமாறன் இயக்கியிருந்தார். இப்படம் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது.

இதைத்தொடர்ந்து தற்போது இப்படத்தின் இரண்டாம் பாகத்தில் சூரி நடித்து வருகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில், படப்பிடிப்பின் போது நடிகர் சூரியிடம் குழந்தைகள் அவரது கேரவனை காண்பிக்கும் படி கேட்டனர். குழந்தைகள் கேட்டதும் அவர்களை கேரவனில் ஏற்றி சூரி சுற்றி காண்பித்துள்ளார்.

இது தொடர்பான வீடியோவை சூரி தனது சமூக வலைதளத்தில் பகிர்ந்து, "படப்பிடிப்பில், மகிழ்வித்து மகிழ்ந்த தருணம்" என்று குறிப்பிட்டுள்ளார்

# ஆசிய விளையாட்டு 2023: செஸ் போட்டியில் வெள்ளி வென்றது இந்தியா பதக்க எண்ணிக்கை 107 ஆனது



19வது ஆசிய விளையாட்டு போட்டி சீனாவின் ஹாங்சோவ் நகரில் நடந்து வருகிறது. இதில் 45 நாடுகளைச் சேர்ந்த 12,400 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

கபடி பெண்கள் பிரிவில் இந்தியா, சீன தைபே அணியை போராடி வீழ்த்தி தங்கம் வென்றது. இது இந்தியாவுக்கு 100வது பதக்கமாக அமைந்தது.

ஏற்கனவே, வில்வித்தையில் இந்தியா 2 தங்கம், 1 வெள்ளி, 1 வெண்கலம் வென்றுள்ளது. இந்திய அணி இதுவரை 28 தங்கம், 38 வெள்ளி, 41 வெண்கலம் என மொத்தம் 107 பதக்கங்களைப் பெற்றுள்ளது. பதக்கப் பட்டியலில் இந்தியா தொடர்ந்து 4வது இடத்தில் நீடிக்கிறது. சீனா முதலிடத்திலும், ஜப்பான் 2வது இடத்திலும், தென் கொரியா 3வது இடத்திலும் உள்ளது.

# உலகக்கோப்பை கிரிக்கெட்: 102 ரன்கள் வித்தியாசத்தில் தென் ஆப்பிரிக்கா அபார வெற்றி



உலககோப்பைகிரிக்கெட்போட்டிதொடரின்4வதுபோட்டியில்தென்ஆப்பிரிக்க அணியும் இலங்கை அணியும் மோதின. டெல்லியில் நடைபெறும் இந்தப் போட்டியில் டாஸ் வென்ற இலங்கை அணி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது.

இதன்படி தென் ஆப்பிரிக்க அணி முதலில் பேட்டிங் செய்தது. துவக்கம் முதலே அதிரடி காட்டிய தென் ஆப்பிரிக்க அணி ரன்மழை பொழிந்தது. குயிண்டன் டாக் (100 ரன்கள்), வாண்டர் உசேன் (108 ரன்கள்) ஏய்டென் மார்கரம் (106 ரன்கள்) ஆகியோர் சதம் அடித்தனர். நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 428 ரன்கள் குவித்துள்ளது.

இதையடுத்து 429 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணி வீரர்கள் குசல் பெரேரா 7, குசல் மெண்டிஸ் 76, சதீர சமரவிக்ரம 23, தனஞ்ஜெயா டி சில்வா 11, சரித் அசலங்கா 79, தசுன் ஷனகா 68, கசுன் ராஜிதா 33, மதீஷா பதிரனா 5, தில்ஷான் மதுஷங்கா 4 ரன்கள் எடுத்து ஆட்டம் இழந்தனர்.

இந்நிலையில் இலங்கை அணி 44.5 ஓவருக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 326 ரன்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. இதனால் தென் ஆப்பிரிக்க அணி 102 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

# உலக கோப்பை கிரிக்கெட் இந்தியா, ஆஸ்தி. அணிகள் சென்னையில் இன்று மோதல்




13வது உலக கோப்பை கிரிக்கெட் போட்டி (50 ஓவர்) இந்தியாவின் 10 நகரங்களில் நடந்து வருகிறது.

இந்நிலையில், சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் இன்று நடைபெறும் 5வது லீக் ஆட்டத்தில் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் இந்திய அணி, 5 முறை சாம்பியனான ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி சமீபத்தில் நடந்த ஆசிய கோப்பை மற்றும் அதைத்தொடர்ந்து நடந்த ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை வென்றதால் திடமான நம்பிக்கையுடன் இந்தப் போட்டியில் களமிறங்குகிறது.




இந்திய அணியின் கேப்டன் ரோகித் சர்மா, விராட் கோலி, லோகேஷ் ராகுல், ஹர்திக்பாண்ட்யாஆகியோர்பேட்டிங்கில்சிறப்பாகஆடுகிறார்கள்.

தொடக்க ஆட்டக்காரர் சுப்மன் கில் டெங்கு காய்ச்சலால் அவதிப்பட்டு வருவதால் இன்றைய ஆட்டத்தில் ஆடமாட்டார் என தெரிகிறது. இது இந்திய அணிக்கு இழப்பாகும். அவர் ஆடாவிட்டால் இஷான் கிஷன் தொடக்க ஆட்டக்காரராக களம் காண வாய்ப்புள்ளது.

பந்துவீச்சில் ஜஸ்பிரித் பும்ரா, முகமது சிராஜ், முகமது ஷமி, ரவீந்திர ஜடேஜா, அஸ்வின், குல்தீப் யாதவ் ஆகியோர் வலுசேர்க்கிறார்கள்.

கடந்த 10 ஆண்டுகளாக ஐ.சி.சி.கோப்பை எதனையும் வெல்லாத குறையை போக்க தீவிரமாக தயாராகி வரும் இந்திய அணி, இந்த உலக கோப்பையில் சொந்த மண்ணில் வெற்றியுடன் தொடங்குமா என ரசிகர்கள் ஆவல் கொண்டுள்ளனர்.

பாட் கம்மின்ஸ் தலைமையிலான ஆஸ்திரேலியா பேட்டிங் மற்றும் பந்துவீச்சில் பலம் பொருந்தியதாக திகழ்கிறது.

பேட்டிங்கில் டேவிட் வார்னர், ஸ்டீவன்சுமித், மார்னஸ் லபுஸ்சேனும், பந்துவீச்சில் ஹேசில்வுட், சீன்அபாட், மிட்செல் ஸ்டார்க், ஆடம் ஜம்பா ஆகியோர் நம்பிக்கை அளிக்கிறார்கள்.

ஆல்ரவுண்டர்களான மேக்ஸ்வெல், கேமரூன் கிரீன், மிட்செல் மார்ஷ் ஆகியோர் அந்த அணியின் ஆணிவேராக உள்ளனர். மொத்தத்தில் வலுவான இரு அணிகள் போட்டியை வெற்றியுடன் தொடங்க கடுமையாக மல்லுக்கட்டும் என்பதால் இந்த ஆட்டத்தில் பரபரப்புக்கு பஞ்சம் இருக்காது.

சென்னையில் நடைபெறும் இந்தப் போட்டிக்கு மழை பாதிப்பு இருக்காது என்று வானிலை மைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்விரு அணிகளும் ஒருநாள் போட்டியில் இதுவரை 149 ஆட்டங்களில் நேருக்கு நேர் மோதியுள்ளன. இதில் 83ல் ஆஸ்திரேலியாவும், 56ல் இந்தியாவும் வென்றுள்ளன. 10 ஆட்டங்கள் முடிவு இல்லாமல் போனது. பிற்பகல் 2 மணிக்கு தொடங்கும் இப்போட்டியை ஸ்டார் ஸ்போர்ட்ஸ் சேனல்கள் நேரடி ஒளிபரப்பு செய்கிறது.

இரு அணிகளின் உத்தேச பட்டியல் விவரம் வருமாறு:

இந்தியா: ரோகித் சர்மா (கேப்டன்), சுப்மன் கில் அல்லது இஷான் கிஷன், விராட் கோலி, ஸ்ரேயாஸ் அய்யர் அல்லது சூர்யகுமார் யாதவ், லோகேஷ் ராகுல், ஹர்திக் பாண்ட்யா, ரவீந்திர ஜடேஜா, அஸ்வின், குல்தீப் யாதவ், ஜஸ்பிரித் பும்ரா, முகமது சிராஜ்.

ஆஸ்திரேலியா: டேவிட் வார்னர், மிட்செல் மார்ஷ், ஸ்டீவன் சுமித், மார்னஸ் லபுசேன், கேமரூன் கிரீன், அலெக்ஸ் கேரி, மேக்ஸ்வெல், மிட்செல் ஸ்டார்க், கம்மின்ஸ் (கேப்டன்), ஹேசில்வுட், ஆடம் ஜம்பா.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.